
அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2022(2023)

# 25A - இந்திய வரலாறு

## புள்ளியிடும் திட்டம்



Devi sukta, Rig Veda 10.125.1-2

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித்திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை 2022 (2023)

## 25A - இந்திய வரலாறு

## புள்ளித்திட்டம்

பகுதி I 1 x 40 = 40

பகுதி II

| | | |
|---|---|---|
| கட்டாயவினா | - | 12 |
| ஏனைய 03 வினாக்களுக்கு 14x3 வீதம் | - | 48 |
| II பகுதிக்கு மொத்த புள்ளிகள் | - | 60 |

இறுதிப்புள்ளிகள் = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ △ 4/5
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன்பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப்பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும், புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

○○○

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ඉන්දීය ඉතිහාසය II (I කොටස)
இந்திய வரலாறு II (பகுதி I)
History of India II (Part I)

25 A | T | II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை**

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.

※ பகுதி I இல் 1 - 40 வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.

※ பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.

※ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

● 1 தொடக்கம் 10 வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) ஜீலம் (2) செனாப் (3) நர்மதா
(4) ராவி (5) சட்லெஜ் (......)

2. (1) ஹெரடோடஸ் (2) மெகஸ்தனிஸ் (3) டைமாகொஸ்
(4) பிளினி (5) ஸ்ராபோ (......)

3. (1) லோதால் (2) சங்குதாரோ (3) கலிபங்கன்
(4) சுக்கஜேன்தோர் (5) தாம்ரலிப்தி (......)

4. (1) யதுஸ் (2) தஸ்யு (3) அனு
(4) புரு (5) துர்வாஸ (......)

5. (1) வஜ்ஜி (2) விதேஹ (3) அவந்தி
(4) மகத (5) கோசல (......)

6. (1) அஸ்வகோசர் (2) நாகார்ஜுன (3) சரக
(4) வசுமித்திர (5) வசுபந்து (......)

7. (1) விக்கிரமசீல (2) உஜ்ஜைனி (3) வல்லபி
(4) நாலந்த (5) ஓதந்திபுரி (......)

8. (1) சாளுக்கியர் (2) இராஷ்டிர கூடர் (3) கன்வா
(4) சோழர் (5) பல்லவர் (......)

9. (1) ரத்னாவலி (2) இரகுவம்சம் (3) மேகதூதம்
(4) சாகுந்தலம் (5) குமாரசம்பவம் (......)

10. (1) முதலாம் பராந்தகன் (2) முதலாம் இராஜராஜன் (3) முதலாம் இராஜேந்திரன்
(4) முதலாம் புலிகேசி (5) முதலாம் இராஜாதிராஜன் (......)

● இல **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு சோடியிலுள்ள** பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை.** பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

11. (1) கங்கை - கனோஜ்
(2) கிருஷ்ணா - உஜ்ஜையினி
(3) நர்மதா - பாருகச்ச
(4) யமுனா - இந்திரப்பிரஸ்தம்
(5) ராவி - ஹரப்பா (......)

12. (1) சமுத்திர குப்தன் - அலகபாத்
(2) இரண்டாம் புலிகேசி - ஐஹோல்
(3) காரவேலன் - ஹதிகும்பா
(4) மாறவர்மன் சுந்தரபாண்டியன் - உத்தரமேரூர்
(5) உருத்திர தாமன் - ஜுனாகாத் (......)

13. (1) வியாக்கிரராஜ - மகாகாந்தார
(2) மகேந்திர - கோசல
(3) விஷ்ணு கோப - காஞ்சி
(4) மகேந்திரகிரி - பிஸ்டபுர
(5) நாகசேன - பல்லக்க (......)

14. (1) வசிஷ்க - குஷாண
(2) கௌதமிபுத்திர சாதகர்ணி - சாதவாகனர்
(3) வத்ஸராஜ - இராஷ்டிரகூடர்
(4) மகேந்திர வர்மன் - பல்லவர்
(5) பிரபாகரவர்த்தன - புஷ்யபூதி (......)

15. (1) சூத்திரக - முத்திரா ராக்ஷச
(2) ஹர்ஷவர்தன - பிரியதர்சிகா
(3) காளிதாசர் - மாளவிகாக்னிமித்திர
(4) பாணபட்டர் - காதம்பரி
(5) கல்ஹணர் - இராஜதரங்கிணி (......)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் தொகுதிகளின் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / திகதிகள் / கூற்றுகள் ஆகியன **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் **தரப்படவில்லை. Y**நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான **சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக் குறிக்குள்** எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | பிந்துசாரன் | A | விக்கிரமாதித்ய |
| (ii) | இரண்டாம் சந்திரகுப்தன் | B | சகல உத்தராபதனாத |
| (iii) | ஹர்ஷவர்தனன் | C | மதுரை கொண்டான் |
| (iv) | முதலாம் இராஜராஜன் | D | அமித்திரகாத |
| (v) | முதலாம் பராந்தகன் | E | மும்முடிச் சோழன் |

(1) DABEC (2) DBACE (3) DCBEA (4) EADCB (5) ECDAB (......)

**17.**

| X | Y |
|---|---|
| (i) பிராசய | A தோசலி |
| (ii) கலிங்க | B சுவர்ணகிரி |
| (iii) அவந்தி | C தக்ஷிலா |
| (iv) உத்தராபத | D உஜ்ஜையினி |
| (v) தக்ஷணாபத | E பாடலிபுத்திரம் |

(1) BADEC (2) BCAED (3) BDCAE (4) EADCB (5) EDCAB (......)

**18.**

| X | Y |
|---|---|
| (i) சந்திரகுப்த மௌரியன் | A நாகார்ஜுன |
| (ii) புஷ்யமித்திர சுங்க | B கௌடில்ய |
| (iii) கனிஷ்க | C தண்டின் |
| (iv) சமுத்திர குப்தன் | D பதஞ்சலி |
| (v) இரண்டாம் நரசிம்மவர்மன் | E ஹரிசேன |

(1) BCDAE (2) BDAEC (3) CABED (4) CBEDA (5) CDEAB (......)

**19.**

| X | Y |
|---|---|
| (i) சாஞ்சி | A புத்தர் சிலை |
| (ii) மதுரா | B சுவரோவியங்கள் |
| (iii) நாலந்த | C செதுக்கல்கள் |
| (iv) அஜந்தா | D சிவன் கோவில் |
| (v) தஞ்சாவூர் | E ஒரு கல்வி நிறுவகம் |

(1) ACDBE (2) ADBCE (3) CAEBD (4) CBEAD (5) CDAEB (......)

**20.**

| X | Y |
|---|---|
| (i) அந்தர்வாசிக | A அந்தப்புர நிர்வாகி |
| (ii) சமாஹர்த | B எல்லைப்புற பாதுகாப்பு அதிகாரி |
| (iii) அந்தபால | C நிதித்துறைப் பணிப்பாளர் |
| (iv) தௌவாரிக | D மாவட்ட நிர்வாக அதிகாரி |
| (v) ராஜீக | E வாயிற் காவலன் |

(1) ABDCE (2) ACBED (3) ADBCE (4) EADCB (5) ECDAB (......)

- **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.

**21.** **கி.மு. 6 ஆம் நூற்றாண்டின் கண இராச்சியங்கள்**

(1) கண இராச்சியங்களின் ஆட்சியாளர்கள் அனைவரும் பௌத்தசமயத்தின் பெரும் ஆதரவாளர்களாக இருந்தனர்.
(2) கண இராச்சியங்களின் நிர்வாக நடவடிக்கைகள் சந்தாகாரத்தில் ஒன்றுகூடித் தீர்மானிக்கப்பட்டன.
(3) கூட்டத்தை நடாத்துவதற்கு குறைநிறைவெண் (கோரம்) அவசியமாகும்.
(4) பெரும்பாலானோரின் விருப்பின்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
(5) பவேணி புத்தகத்துக்கு ஏற்ப குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. (......)

**22.** **சந்திரகுப்த மௌரியனுக்கும் செலியூக்ஸ் நிக்கடேருக்கும் இடையிலான உடன்படிக்கை**

(1) நிக்கடேரினால் ஏரியா, அரகோசியா, பரோபனிஸதெய் கெட்ரோசியா ஆகிய சில சத்ரபதிகள் சந்திரகுப்த மௌரியனுக்கு ஒப்படைக்கப்படுதல்
(2) இந்தப் பிரதேசங்கள் ஒப்படைக்கப்பட்டதுடன் மௌரிய சாம்ராச்சியம் கிரேக்கத்தின் எல்லை வரை பரவியமை
(3) சந்திரகுப்த மௌரியனால் நிக்கடேருக்கு 500 யானைகள் பரிசளிக்கப்பட்டமை
(4) நட்பின் அடையாளமாக நிக்கடேரின் மகளை சந்திரகுப்த மௌரியனுக்குத் திருமணம் செய்வித்தமை
(5) நிக்கடேரினால் மௌரிய அரச சபைக்கு மெகஸ்தீனிஸ் என்பவர் தூதுவராக அனுப்பிவைக்கப்பட்டமை (......)

**23.** மௌரியர்களின் வீழ்ச்சிக்கும் அழிவுக்குமான காரணம்
(1) பொருளாதார வீழ்ச்சி
(2) பிரதேச மற்றும் எல்லைப்புற ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஆட்சி
(3) அசோகனின் பின்னர் பலவீனமான ஆட்சியாளர்கள்
(4) இந்து - கிரேக்கர்களின் படையெடுப்பு
(5) அசோகனின் சமயக் கொள்கைக்கு எதிராக எழுந்த பிராமணர்களின் எதிர்ப்பு (......)

**24.** ஹூணர்கள்
(1) ஹூணர்களின் முதலாவது ஆக்கிரமிப்பு ஸ்கந்த குப்தனின் ஆட்சிக் காலத்திலேயே இடம்பெற்றது.
(2) ஹூணரின் ஆக்கிரமிப்பைத் தோற்கடிப்பதில் ஸ்கந்தகுப்த மன்னன் வெற்றி கண்டான்.
(3) இதற்கு முன்னரும் ஹூணர்கள் குப்த சாம்ராச்சியத்தின் மேற்குப்பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தனர்.
(4) பல தசாப்தங்களின் பின்னர், தோரமாணவின் கீழ் ஹூணர்கள் இந்தியாவை வெற்றிகரமாக ஆக்கிரமித்துக்கொண்டனர்
(5) தோரமாணவின் மகன் மிகிரகுல, யசோதர்மனால் கொலை செய்யப்பட்டான் எனக் கூறப்படுகின்றது. (......)

**25.** காஞ்சியின் பல்லவர்கள்
(1) கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் சிம்ம விஷ்ணுவினால் புதிய பல்லவ அரச வம்சம் தாபிக்கப்பட்டது.
(2) பல்லவர்களின் தலைநகரமான காஞ்சி கல்வி, கலாசாரம் ஆகியவற்றுக்கான நிலையமாக விளங்கியது.
(3) காஞ்சியில் 10,000 பௌத்த பிக்குகளும் நிகண்டர்களும் இருந்தனர் என்று ஹியுங்சாங் குறிப்பிட்டுள்ளார்.
(4) மகாபலிபுரத்தின் இரதங்கள் முதலாம் நரசிம்மவர்மனால் அமைக்கப்பட்டன.
(5) கி.பி. 9 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்லவ இராச்சியம் பாண்டிய ஆட்சியாளர்களால் அடிமைப்படுத்தப்பட்டது. (......)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மாத்திரம் சரியாயின் ............ 1 எனவும்
(A) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ............ 2 எனவும்
(B) யும் (C) யும் மாத்திரம் சரியாயின் ............ 3 எனவும்
(C) யும் (D) யும் மாத்திரம் சரியாயின் ............ 4 எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ......... 5 எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மாத்திரம் சரி | (A) யும் (C) யும் மாத்திரம் சரி | (B) யும் (C) யும் மாத்திரம் சரி | (C) யும் (D) யும் மாத்திரம் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** மகாபாரதம்
(A) மகாபாரதம் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட மிகப் பழைய காவியங்களில் ஒன்றாகும்.
(B) மகாபாரதம் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான நீண்டகால மோதலை அடிப்படையாகக் கொண்டது ஆகும்.
(C) வியாச முனிவரே மகாபாரதத்தை எழுதியவராகக் கருதப்படுகின்றார்.
(D) குருஷேத்திரத்தில் நிகழ்ந்த புகழ்பெற்ற போரின் இறுதியில் யுதிஷ்டிரர் வெற்றி பெற்றார். (......)

27. கனிஷ்க

(A) குஷாண அரசவம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளர் கனிஷ்க ஆவார்.

(B) அவரின் ஆட்சிக் காலத்தில் பிக்குவான அஸ்வகோஷரின் தலைமையில் நான்காவது பௌத்த மாநாடு குண்டலவனத்தில் நடைபெற்றது.

(C) கனிஷ்கரின் அரச சபை பௌத்த பிக்குகள் சிலரையும் கொண்டிருந்தது.

(D) தென் இந்தியாவுக்கு மகாயான பௌத்த சமயத்தை அறிமுகஞ் செய்த பெருமை கனிஷ்கருக்கே உரியது. (……)

28. ஹர்ஷவர்தன

(A) நர்மதைக்கு அப்பால் ஆதிக்கத்தை பரப்புவதற்கு ஹர்ஷவர்தன மேற்கொண்ட முயற்சி இரண்டாம் புலிகேசியினால் தோற்கடிக்கப்பட்டது.

(B) மகாயான கோட்பாட்டை ஊக்குவிப்பதற்கு ஹர்ஷவர்தன மன்னன் யுவான் சுவாங்கின் பங்களிப்புடன் கனோஜ் நகரில் மாநாடு ஒன்றை நடாத்தினான்.

(C) ராஜ்யவர்தனவைக் கொன்றதற்குப் பழிவாங்கும் முறையில் ஹர்ஷவர்தன மன்னன் கௌட இராச்சிய ஆட்சியாளனான சசங்க மன்னனை கொலை செய்தான்.

(D) ஹர்ஷவர்தனவின் இறப்பின் பின்னர் கனோஜ் இராசதானி யசோவர்மனால் கைப்பற்றப்பட்டது. (……)

29. பாண்டியர்கள்

(A) முதலாவது பாண்டிய சாம்ராச்சியம் கடுங்கோன் மன்னனால் ஆரம்பிக்கப்பட்டது.

(B) இரண்டாம் மாறவர்மன் இராஜசிங்கன் இலங்கை மன்னனைத் தோற்கடிக்க கூடியதாயிருந்தது.

(C) இரண்டாம் பாண்டிய சாம்ராச்சியத்தின்போது ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் தென் இந்தியாவில் பாண்டியரின் ஆதிக்கத்தை உச்ச நிலைக்கு கொண்டு சென்றான்.

(D) சோழர்களால் மதுரை கைப்பற்றப்பட்டதுடன் இரண்டாம் பாண்டிய சாம்ராச்சியம் முடிவடைந்தது. (……)

30. பாலர்கள்

(A) பாலர்கள் வங்காளத்தில் சேன அரசவம்சத்தைத் துரத்திய பின்னர் ஆதிக்கம் பெற்றனர்.

(B) பால அரசர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றியபோதும் இந்து சமயத்தைத் துன்புறுத்தவில்லை.

(C) தர்மபால மன்னன் கனோஜின் ஆட்சியாளனான இந்திராயுதவை நீக்கிவிட்டு சக்ராயுதவை சிம்மாசனத்தில் ஏற்றினான்.

(D) நாலந்த பௌத்த கல்வி நிறுவகம் தர்மபால மன்னனால் தாபிக்கப்பட்டது. (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

31. உருத்திரதாமனால் எந்த சத்ரபதி நிர்வகிக்கப்பட்டது?

(1) மதுரா (2) மஹாராஷ்டிரா (3) தக்ஷிலா
(4) காந்தார (5) உஜ்ஜைனி (……)

32. டைமொகொஸ் எந்த அரசனின் அரசசபையில் தூதுவராக பணிபுரிந்தான்?

(1) சந்திரகுப்த மௌரியன் (2) பிந்துசாரன் (3) அசோகன்
(4) காலாசோகன் (5) புஷ்யமித்திர சுங்கன் (……)

33. மௌரியர் ஆட்சிக் காலத்தில் மிகவுயர்ந்த கல்வி நிறுவகம் எது?

(1) நாலந்த (2) தக்ஷிலா (3) மதுரா
(4) விக்கிரமசீலா (5) வலபி (……)

34. சங்க இலக்கியங்கள் எந்த மன்னர்களின் ஆதரவினால் வளம்பெற்றிருந்தன?

(1) சோழர் (2) பல்லவர் (3) சாளுக்கியர்
(4) பாண்டியர் (5) இராஷ்டிரகூடர் (……)

35. வாகாடக இராச்சியத்துக்கு ஆட்சியாளராக வந்த குப்த இளவரசியின் பெயர் யாது?

(1) பிரபாவதி குப்த (2) குமாரதேவி (3) தேவி சந்திரகுப்த
(4) தத்ததேவி (5) குபேரநாகா (……)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **இரண்டு** வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது கூற்றை** மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | இருக்கு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களின் பெயர்களுக்கு அமைய அக்காலத்தில் குடியிருப்புக்கள் குருஷேத்திரத்தைச் சுற்றியுள்ள இடங்களில் அமைந்திருந்தன எனத் தெரிய வருகின்றது. | பிற்பட்ட வேதகாலத்தில் கலாசார மையமானது யமுனை, கங்கை நதிகளினால் செழிப்படைந்த மத்திய தேசத்துக்கு மாற்றப்பட்டது. | (.........) |
| **37.** | பிராமணீயத்தின் தீவிர ஆதரவாளர்களான சுங்க ஆட்சியாளர்கள் பௌத்தர்களை துன்புறுத்தலுக்குள்ளாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். | சமுத்திர குப்த மன்னன் தெற்கில் கைப்பற்றிய 12 இராச்சியங்களைத் தனது இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டதால் அவனுடைய ஆதிக்கத்தைத் தென் இந்தியாவிலும் பரப்பினான். | (.........) |
| **38.** | சந்திர குப்த மௌரிய மன்னன் காலத்தில் சௌராஷ்டிரத்தை ஆட்சி செய்த புஷ்ய குப்த என்ற இளவரசனால் சுதர்சன நீர்த்தேக்கம் கட்டப்பட்டது. | பிற்காலத்தில் உருத்திரதர்மனால் சுதர்சன நீர்த்தேக்கம் புனரமைக்கப்பட்டது. | (.........) |
| **39.** | இரண்டாம் சந்திர குப்த மன்னன் மால்வா, குஜராத், சௌராஷ்டிரா என்பவற்றை இணைத்துக் கொண்டதால் குப்த சாம்ராச்சியத்தின் ஆதிக்கம் மேற்குத் துறைமுகங்கள் வரை பரவியிருந்தது. | மேற்குக் கடல் வர்த்தக முக்கியத்துவம் காரணமாக இரண்டாம் சந்திர குப்தன் தனது தலைநகரை பாடலிபுரத்திலிருந்து உஜ்ஜைனிக்கு மாற்றிக் கொண்டான். | (.........) |
| **40.** | முதலாம் இராஜராஜன் கங்கை நதிப் பள்ளத்தாக்கு பிரதேசத்தைத் தான் வெற்றி கொண்டதன் ஞாபகார்த்தமாக கங்கை கொண்டான் என்ற விருதுப் பெயரைப் பயன்படுத்தினான். | முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியர்களின் தலைநகரான வாதாபியை அடிமைப் படுத்தியதன் ஞாபகார்த்தமாக வாதாபி கொண்டான் என்ற விருதுப் பெயரைப் பயன்படுத்தினான். | (.........) |

❋ ❋

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022(2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **25A**

විෂයය / பாடம்: **இந்திய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 1 | 31. | 5 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 2 | 32. | 2 |
| 03. | 5 | 13. | 5 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 5 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 5 | 35. | 1 |
| 06. | 3 | 16. | 1 | 26. | 5 | 36. | 2 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 5 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 3 | 29. | 2 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 3 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்
මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ඉන්දීය ඉතිහාසය II (II කොටස)
இந்திய வரலாறு II (பகுதி II)
History of India II (Part II)

**25 A T II**

## இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

* நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
* பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
* பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
* பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** பகுதி **I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப்** பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) தானேஸ்வர் | (ii) பிரயாக் | (iii) சட்லெஜ் |
| (iv) வாதாபி | (v) துங்கபத்திரா | (vi) காவேரிப்பட்டினம் |
| (vii) மக்ரான் | (viii) தக்ஷிலா | (ix) விந்திய மலைத்தொடர் |
| (x) மதுரை | (xi) மகாநதி | (xii) கலிங்கம் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

### பகுதி B

**2.** "சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகமாகும்."

(i) இந்த நாகரிகத்தின் முக்கிய இரண்டு நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்த நாகரிகத்தின் இரண்டு முக்கிய துறைமுகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) இந்த நாகரிகத்தின் நகரத்திட்டமிடல் பற்றி சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) "சிந்துவெளி நாகரிகம் என்பது நகர நாகரிகம் ஆகும்." என்ற கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? காரணம் தருக. (08 புள்ளிகள்)

**3.** பிற்பட்ட வேத காலத்தின் சமயம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளின் முக்கிய பண்புகளை விவரிக்குக. (16 புள்ளிகள்)

**4.** சந்திர குப்த மௌரியனின் சாதனைகளை மதிப்பீடு செய்க. (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வேதகாலத்தின் சமூகம்

(ii) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கண இராச்சியம்

(iii) மௌரியர்களின் முன்னர் மகதத்தின் அரசியல் வரலாறு

(iv) மூன்றாம் பௌத்த மாநாடும் அதன் விளைவுகளும்

($08 \times 2 = 16$ புள்ளிகள்)

## பகுதி C

**6.** மௌரிய சாம்ராச்சியத்தின் வீழ்ச்சியின் பின்னர் வடமேற்கு இந்தியாவில் வெளிநாட்டு ஆதிக்கம் தாபிக்கப்பட்டமை பற்றி விவரிக்குக. (16 புள்ளிகள்)

**7.** பின்வரும் தலைப்புக்களில் குப்தர் கால கலாசார அபிவிருத்தி பற்றி பரிசீலிக்குக.

(i) மொழியும் இலக்கியமும்

(ii) சமயம்

(iii) கலைகளும் கட்டிடக்கலையும் (16 புள்ளிகள்)

**8.** பின்வரும் தலைப்புக்களின் கீழ் சோழர் ஆதிக்கத்தின் பரம்பலை விளக்குக.

(i) கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தென் இந்தியாவில் சோழர் ஆதிக்கத்தை தாபித்த முதல் ஆட்சியாளரின் பெயரினைத் தருக. (01 புள்ளி)

(ii) சோழர் ஆதிக்கத்தின் கீழ் நிலவிய **இரண்டு** மண்டலங்களின் பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் சாதனைகளை மதிப்பிடுக. (09 புள்ளிகள்)

(iv) சோழர் ஆதிக்கத்தின் அழிவு பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (04 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) குஷாணர் காலத்தில் பௌத்தம்

(ii) சாதவாகனரின் கீழ் தக்கணம்

(iii) சமுத்திர குப்தனின் இராணுவ முற்றுகைகள்

(iv) முக்கோணப் போராட்டம்

$(08 \times 2 = 16$ புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

| | | |
|---|---|---|
| ඉන්දීය ඉතිහාසය II<br>இந்திய வரலாறு II<br>History of India II | 25 A | T |



# இந்திய வரலாறு

## இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி.1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும், ஏனைய B,C பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக. (மொத்தம் நான்கு வினாக்கள்)

**பகுதி A**

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) தானேஸ்வர் | (ii) பிரயாக் | (iii) சட்லெஜ் |
| (iv) வாதாபி | (v) துங்கபத்திரா | (vi) காவேரிப்பட்டினம் |
| (vii) மக்ரான் | (viii) தக்ஷிலா | (ix) விந்திய மலைத்தொடர் |
| (x) மதுரை | (xi) மகாநதி | (xii) கலிங்கம் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

**( 12 புள்ளிகள்)**

**பகுதி - B**

(2) "சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரீகமாகும்"

(i) இந்த நாகரீகத்தின் முக்கிய இரண்டு நகரங்களை பெயரிடுக.

மொகஞ்சதாரோ, ஹரப்பா, சன்ஹூதாரோ, லோதல், கலிபன்கன்,சந்தவாலா,டொலவீர்,பனவாலி, ரக்கார்ஹி, ஜுடைஜொதாரோ,சுக்தஜென்தோர்,தாபர்கோட்,ரூபார். **(02 புள்ளிகள்)**

**(ii) இந்த நாகரிகத்தின் இரண்டு முக்கிய துறைமுகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

லோதால், சுக்தஜென்தோர், சொட்கா-கோஹ், ரங்க்பூர். **(02 புள்ளிகள்)**

**(iii) இந்த நாகரிகத்தின் நகர திட்டமிடல் பற்றி சுருக்கமாக விளக்குக.**

- நகர திட்டமிடலின் போது ஒவ்வொரு நகரத்திற்குமான பொதுத்தன்மையுடன் அமைக்கப்பட்டிருந்தமை.
- நகரங்களைத் திட்டமிட்டு அமைத்திருந்தமை ( கலிபங்கன், சன்ஹூதாரோ, ரூபார்)
- நகரத் திட்டமிடலில் உள்நகரம், வெளிநகரம் என இரு பகுதிகளை உள்ளடக்கியிருந்தமை.
- உள்நகர கட்டிடங்கள் உயர்ந்த மேடையின் மீது அமைக்கப்பட்டிருந்தமை. அந்நகரமே நிர்வாக மத்திய நிலையமாக உபயோகிக்கப்பட்டமை.
- நகரத்தை சுற்றி காவற் கோட்டைகளுடன் கூடிய சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தமை. அவை பாதுகாப்பு கோட்டைகளை போல காணப்பட்டமை.
- அடுக்குமாடி கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.
- ஒவ்வொரு வீடுகளும் கிணறு, குளியலறை உட்பட்ட அனைத்து சுகாதார வசதிகளையும் கொண்டிருந்தமை.
- சில வீடுகளில் திறந்த உள் முற்றம் காணப்பட்டமை.

- வீடுகளுக்குள் நுழையும் வாயில்கள் பிரதான வீதியை நோக்கியதாக அமைக்கப்பட்டிருந்தமை.
- செவ்வக வடிவ திட்டத்திற்கு ஏற்ப நகரங்கள் அமைக்கப்பட்டிருந்தமை.
- பெரிய நகரங்களில் உள்ளே பரந்த வீதி போக்குவரத்து தொகுதிகள் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தமை.
- வீதி நிர்மாணங்களும் செவ்வக அமைப்பிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தமை.
- வளர்ச்சி அடைந்த சுகாதார மற்றும் கழிவகற்றும் செயல் திட்டங்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதோடு, சிறந்த வடிகாலமைப்பு(கான்) முறையும் உருவாக்கப்பட்டிருந்தமை.
- ஆரோக்கியத்தை முற்படுத்தியே நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை.
- தொழிலாளர்களுக்கென தனியான வீடுகள் அமைக்கப்பட்டிருந்ததோடு அவை தானியக்களஞ்சியங்களுக்கு அருகிலேயே அமைந்திருந்தன. **( 04 புள்ளிகள்)**

**(iv) "சிந்துவெளி நாகரிகம் என்பது ஒரு நகர நாகரிகமாகும்" என்ற கூற்றினை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? காரணங்களை முன்வைக்குக.**

- சிந்துவெளியிலிருந்து ஒரு நகர நாகரிகத்திற்குரிய அம்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் அநாகரிகம் ஒரு நகர நாகரிகம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பண்புகள் பின்வருமாறு.
- சிறந்த திட்டமிடலுடன் கூடிய பாரிய நகரங்கள் அமைக்கப்பட்டிருந்தமை. (மொகஞ்சதாரோ, ஹரப்பா, தொலவீர்).
- அனைத்து நகரங்களினதும் நகரத் திட்டமிடல் ஒரே மாதிரியான பண்புகளை கொண்டிருந்தமை. (மதில்கள், பாதுகாப்பு கோட்டைகளுடனான அரண்கள், குடியிருப்புகள், வீதிகள், நீர் வடிகாலமைப்பு முறைகள்).
- பாரிய கட்டிட நிர்மாணங்கள். (மொகஞ்சதாரோவின் குளியலறைகள், ஹரப்பாவின் தானிய களஞ்சியங்கள், பாதை ஒளி விளக்குத் தூண்கள், ரக்கார்ஹின் குளியலறைகள்).
- கட்டிட நிர்மாணத்தில் பிரதானமாக செங்கற்கள் பாவிக்கப்பட்டமை( சுடப்பட்ட செங்கற்கள், சூரிய ஒளியில் காயவைக்கப்பட்டவை).
- விவசாயத்தின் மிகை உற்பத்தியை அனுபவிக்கும் ஆட்சியாளர்கள் மதகுருமார்கள் காணப்பட்டமை.
- சிறந்த நிர்வாக அமைப்பு காணப்பட்டமை.
- சிக்கலான சமூக அமைப்புக்கள் காணப்பட்டமை. ( பல்வேறு சமூகப் பிரிவுகள் - ஆட்சியாளர்கள், மதகுருமார்கள், பிரபுக்கள், நகர மக்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள், பல்வேறு கைத்தொழிலாளர்கள்). பிரபுக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள் வெவ்வேறாக அமைக்கப்பட்டிருந்தமை.
- பிரதான பொருளாதாரமாக விவசாயம் விளங்கியமை.
- உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் காணப்பட்டமை. (சுமேரியா வரை) - துறைமுகங்கள், அளவை நிறுவை முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
- உலோக பாவனை (தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு பாவனைகளுடன் ஆபரணங்கள் சிற்ப செதுக்கள்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.)
- உருவ எழுத்து முறைகள் காணப்பட்டமை
- கலைகள்(ஓவியம்,சிற்பம்,செதுக்கள்)
- போக்குவரத்து
- பொழுது போக்குகள் (வண்டி ஓட்டுதல் தாயகட்டை வேட்டையாடல்). **( 08 புள்ளிகள்)**

(3) பிந்திய வேத காலத்தில் சமயம் மற்றும் அரசியல் நடவடிக்கைகளின் முக்கிய பண்புகளை விவரிக்குக.

**சமய நிலைமை.**

- இருக்கு வேத காலத்தில் முன்னிலையில் இருந்த இந்து, வருணன், மாருத்,அக்கினி, சாவித்திரி, பூசஸ், வாயு, சோம போன்ற தெய்வங்கள் மீதான பக்தி குறைவடைந்தமை.
- பல தெய்வக் கொள்கை ஆக வளர்ச்சியடைந்தமை.
- உலகை உருவாக்கிய கடவுளாக கருதப்படும் பிரஜாபதி (மகா பிரம்மன்) இக்காலத்தில் முதலிடம் பெற்றமை. மந்திர தந்திரங்கள், சூனியம் மற்றும் பூத கணங்கள் மீதான நம்பிக்கைகளும் வளர்ச்சியடைந்தமை (அதர்வன வேதம்).
- இருக்கு வேத காலத்தில் எளிமையாக இருந்த பூஜை முறைகள் இக்காலத்தில் பெரும் யாக ஹோமமாக வளர்ச்சியுற்றுமை.( புருஷ மேட யாகம், அஸ்வமேத யாகம்).
- மதகுருக்களாக இருந்த பிராமணர்களின் நிலை உயர்வடைந்ததோடு அவர்கள் பூமியின் மீது நடமாடும் தெய்வங்களாக மதிக்கப்பட்டனர்.
- ஆரணியங்கள் உபநிடதங்கள் மூலம் ஏற்பட்ட புதிய யுக மாற்றத்தின் காரணமாக பிராமணக் கொள்கைக்கு எதிராக சைவ மரபுகள் மேலெழுந்தமை.
- இதன்படி இம்சையான யாகமுறையிலான கர்ம மார்க்கத்திற்கு பதிலாக பக்திவாத சிந்தனையிலான ஞான வழி மேலெழுந்தமை.
- உலகம் அண்டம் வாழ்க்கை ஆத்மா மரணம் மரணத்தின் பின்னரானஉலகம் போன்ற ஆழமான தத்துவங்களுடன் உரையாடல்களும் ஏற்பட்டதோடு அவை விவாத பொருளாகவும் வளர்ச்சி அடைந்தமை.
- வர்ணாசிரம தர்மங்கள் செல்வாக்கு பெற்றமை.

**அரசியல் நிலை**

- கோத்திர நிலையிலிருந்து நிர்வாக கட்டமைப்பை நோக்கி வளர்ச்சி பெற்றமை. (ராஜன்).
- ஐதீக பிராமணத்தின்படி மேற்கின் அரசன் - சாம்ராட், தெற்கின் அரசன் - போஜ, வடக்கின் அரசன் - விராட், மத்திய பிரதேச அரசன் - ராஜன் என அடையாளப்படுத்தப்பட்டனர்.
- அசுவமேதயாகம் ராஜசூய யாகம் போன்ற வேள்விகளால் அரசனின் அதிகாரம் வளர்ச்சி அடைந்தமை.
- இக்காலத்திலும் சங்கம், சபைகள் என்பன செயற்பட்டமை.
- அரசனுக்கு உதவியாக நிர்வாக அதிகாரிகள் வகுப்பு ஒன்று காணப்பட்டவமை( ரத்தீ அல்லது ராஜ கர்ண) புரோகிதர், சேனாதிபதி கிராமணி, பாகதூதர், சூத்ர, சங்ருஹீத்ரு (பொருளாளர்), அக்ஷவாமி (சூதாட்ட அதிகாரி),சத்ரி, கோவிக்கர்த்தன,பாலாகல (தூதர்) போன்ற அதிகாரிகள் நிர்வாக உதவிகள் புரிந்தமை
- அரசனுக்கு செலுத்த வேண்டிய வரியை (பலி) உற்பத்திகள் மூலமும் மாடுகளாகவோ செலுத்தியமை. **( 16 புள்ளிகள்)**

**(4) சந்திரகுப்த மௌரியனின் சாதனைகளை மதிப்பீடு செய்க.**

- சந்திரகுப்த மௌரியனின் ஆட்சிக் காலம் (கி.மு. 324 - 300)
- மௌரியப் பேரரசின் ஆரம்ப ஆட்சியாளனாகவும், இந்திய வரலாற்றில் பேரரசு கொள்கையில் வெற்றி அடைந்த முதல் மன்னனாகவும் திகழ்ந்தமை.
- நந்த மன்னனுக்கும் தாவமுரா என்னும் பெண்ணுக்கும் பிறந்தவனாக புராண கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, பிப்பலி வனத்தின் மௌரிய கோத்திரத்தவனாகவும் கருதப்படுகின்றான்.
- கிரேக்க மூலாதாரங்களில் இவன் சந்திர கோட்டஸ் என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளான்.
- சாணக்கியனின் (விஷ்ணுகுப்த, கௌடில்ய) ஆலோசனைப்படி நந்த வம்ச ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மௌரிய ஆட்சியை தாபித்தான்.
- கிரேக்க அதிகாரத்திலிருந்து வடமேற்கு இந்தியாவை விடுவித்தான். சல்யூகஸ் நிகேடரை போரில் வெற்றி கொண்டு அவனுடன் உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டான். இதன் மூலம் ஏரியா (ஹேராட்), எரகோசியா (கந்தஹார்), பரோபனிசதாய் (பலுகிஸ்தான்), கெடிரோசியா (காபூல்) ஆகிய பிரதேசங்களை பெற்றதோடு, மௌரியப் பேரரசின் எல்லையை பாரசீகம் வரை வியாபித்தான்.
- சந்திரகுப்த மௌரிய மன்னன் 500 யானைகளை சல்யூக்கஸ் நிகேதருக்கு பெற்று கொடுத்ததனால் சல்யூக்கஸ் நிகேடர் தனது மகளை சந்திரகுப்தனுக்கு விவாகம் செய்து வைத்தான்.
- அரச தூதுவராக மெகஸ்தனிஸ் மௌரிய பேரரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
- மௌரிய பேரரசின் பலம் டெக்கானிலிருந்து தென்பகுதி வரை பரவலடைந்ததோடு, மேற்கே அமைந்திருந்த கத்தியவார் தீபகற்பத்தின் சௌராஷ்டிர தேசமும் இவனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. என ருத்ர தாமனின் கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சந்திரகுப்த மௌரியன் இதன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதோடு சுதர்சன வாவியையும் புனரமைப்பு செய்தான்.
- வெளிநாடுகளுடனான தொடர்புகளை மேற்கொண்டான். (சிரியா, எகிப்து).
- தரைவழி கடல் வழி வர்த்தகங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- சிறந்த நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்தினான், மத்திய நிர்வாகம் (மந்திரி பர்ஸத் அமைச்சர்கள், பிரதான அமைச்சர்கள், அதிகாரிகள், புரோகிதர், யுவராஜா, சேனாதிபதி) நகர நிர்வாகம் (பாடலிபுத்திரம் 5 உறுப்பினர்களைக் கொண்ட 6 குழுக்கள் காணப்பட்டன). கிராம நிர்வாகம் (கிராமிக, கோப).
- விவசாயத்தை அபிவிருத்தி அடையச் செய்தான். (நீர்ப்பாசன திட்டங்கள்).

**(16 புள்ளிகள்)**

(5) பின்வரும் தலைப்புகளில் இருந்து எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக. **( 08 x 02 = 16 புள்ளிகள்)**

**(i) வேத காலத்தின் சமூகம்.**

- தந்தை வழிச் சமூகம்.
- பழக்கவழக்கங்களைப் பாதுகாத்தல்.
- வீடுகள் மரப் பலகை, மூங்கில் ஆகியவற்றினால் அமைக்கப்பட்டு வைக்கோல் மூலம் கூரைகள் வேயப்பட்டிருந்தமை. அவ்வீடுகள் பூஜையறை பெண்கள் அறை, பொது நடவடிக்கைகளுக்கான அறை, சமையலறை ஆகிய பகுதிகளை கொண்டிருந்தது.
- ஒருதார திருமணம் வழக்கில் இருந்தாலும் பலதார மணமும் காணப்பட்டது.
- திருமண உற்சவம் பெருவிழாவாக கொண்டாடப்பட்டது.
- ஆண் குழந்தைகளைப் பெறுவதே திருமணத்தின் பிரதான நோக்கமாக கருதப்பட்டது.
- பெண்ணுரிமை காணப்பட்டது மனைவி கணவனுடன் பூஜையில் பங்கேற்றல். படித்த பெண்கள் காணப்படல் (அபாலா விஸ்வச்சாரா,கோஷா).
- வர்ண பாகுபாடு நிலவினாலும் அது சமூகத்தில் நிலை பெற்றிருக்கவில்லை. ஆரியர் ஆரியர் - அல்லாதவர் எனும் பேதங்கள் காணப்பட்டமை.
- ஆடைகள் நான்கு பகுதிகளைக் கொண்டிருந்தது.( நிவி, வாச, அடிவாசம், தலைப்பாகை).
- ஆண் - பெண் இருபாலாரும் ஆபரணங்கள் அணிந்தமை(கர்ண சோபன, குரீர, நையாச்சாணி,நிக்ச)
- ஆண்கள் தலையை மறைக்கும் ஆடை அணிந்தமை.
- பிரதான உணவுகளாக தானியங்கள், இறைச்சி, மீன், பால், பாலுணவுகள், பழங்கள் என்பன பயன்படுத்தப்பட்டமை.
- சோம பானம் உட்பட்ட மதுபானங்கள் காணப்பட்டமை.
- உற்சவங்களின் போது ஆடல் பாடல்கள் காணப்பட்டமை.
- சமூக வாழ்வின் மையமாக 'சபை' விளங்கியது.
- வண்டி ஓட்டுதல், வேட்டையாடல், தாயகட்டை விளையாட்டுக்கள் என்பன பொழுதுபோக்குகளாக விளங்கின.
- இயற்கை பொருட்களை தெய்வமாக வணங்குதலும் எளிமையான யாக முறைகளும் காணப்பட்டன.

**( 08 புள்ளிகள்)**

**(ii) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் கண இராச்சியம்.**

- கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இந்திய சொலோ ஜெனப்பதங்களில் இரண்டு வகையான ஆட்சி முறைகள் காணப்பட்டன.
- அரசாட்சி 2.கணராச்சியம் (குழுவாட்சி )
- குழு ஆட்சியே முக்கியத்துவம் பெற்றிருந்தது பௌத்த இலக்கியங்களில் கண இராச்சியங்கள் 9 தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. கபில வஸ்துவில் சாக்கியர், வைஷாலி- லிச்சவியர்,மிதிலை - விதேகர், இராம கிராமம் - கோலியர் குசிநகர்- பாவாஹியர், சுங்சுமாரகிரி - வக்கயர், கேசபுத்திரம் - காலாமயர், அல்லகப்பம் - புல்லியர்.பிப்பலிவனம் - மோலியர்).
- இவற்றில் அரச பிரமுகர்கள் கணபதி, கண சிரேஷ்ட,கணராஜன் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர்
- இதன் ஆட்சி நிர்வாகப் பிரதிநிதிகளை கொண்ட சபை ஒன்றின் மூலம் நடாத்தப்பட்டது.
- லிச்சவி குழுவாட்சியில் 7707 அரசர்கள் இருந்ததாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நிர்வாக சபை கூடும் மண்டபம் 'சந்தாகாரம்'
- ( கூடாகார மண்டபம்) எனப்பட்டது.
- ஆட்சி நிர்வாகக் கொள்கை ' சப்த- அபரிஹாணி எனும் ஏழு தர்மங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டிருந்தது.
- புத்த பெருமானும் கூட வஜ்ஜி இராச்சிய கொள்கையாகவிருந்த இந்த சப்த- அபரிஹாணி தர்மத்தை ஆதரித்தார்.
- அரச நீதிமன்றம் ' பிரவேனி புஸ்தகம் ' என்பதற்கிணங்க செயற்பட்டது.
- சந்திரகுப்த மௌரியனின் ஆட்சிக் காலத்தில் கண இராச்சியமும் இல்லாது ஒழிக்கப்பட்டது.

**( 08 புள்ளிகள்)**

**(iii) மௌரியர்களுக்கு முன் மகதத்தின் அரசியல் வரலாறு.**

- கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் ஹரியங்க வம்சத்திற்குரிய பிம்பிசார மன்னனின் கீழ் மகதம் எழுச்சி அடைந்தமை.( யுத்தம் மூலம் - அங்கதம், திருமணம் மூலம் கோசலை, லிச்சவி நட்புறவு மூலம்- காந்தாரம்).
- அஜாசத்துரு மன்னனின் கீழும் அதிகாரம் பரவலடைந்தது. (கோசலை, லிச்சவியுடனான யுத்தங்கள்).
- ஹரியங்க வம்சத்தின் பின்னர் சிசுநாக வம்சம் ஆட்சி பெற்றது. சிசுநாக மூலம் அவந்தி இராச்சியம் கைப்பற்றப்பட்டது.
- சிசுநாக வம்சத்தை தோற்கடித்து நந்தர்கள் ஆட்சி பெற்றனர்.
- நந்த வம்சத்தின் முதல் ஆட்சியாளன் மகா பத்மநந்தன் ஆவான். பௌத்த இலக்கியங்களில் இவன் 'உக்கசேன' என குறிப்பிடப்பட்டுள்ளான்.
- இம்மன்னன் பாஞ்சாலம், காய், ஹைறைப, கலிங்கம், அஸ்மக, கூறு, இக்சவாக, தேமதுர, சூரசேன, விதிகோத்ர, ஆகிய வம்சங்களை கைப்பற்றி மகதத்துடன் இணைத்ததாக புராண கிரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- நந்த ஆட்சியாளர்கள் 9 பேர் இருந்ததாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நந்த ஆட்சி காலத்திலேயே வடமேற்கு இந்தியாவில் அலெக்ஸாண்டரின் ஆக்கிரமிப்பு இடம் பெற்றுள்ளது.
- வலிமையான இராணுவத்தைக் கொண்டிருந்த தனநந்தனை தோற்கடித்து சந்திரகுப்த மௌரியன் ஆட்சிக்கு வந்தான்.

**( 08 புள்ளிகள்)**

**(iv) மூன்றாவது பௌத்த மகாநாடும் அதன் விளைவுகளும்.**

- கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் (புத்தர் பரி நிர்வாணம் அடைந்து 236 வருடங்களின் பின்னர்) அசோக மன்னன் ஆதரவுடன் இடம்பெற்றது
- மொக்களி புத்ததிஸ்ஸ தேரர் தலைமையின் கீழ் பவுலுப் நகரின் அசோகாராமையில் 1000 பிக்குகள் கலந்து கொள்ள 9 மாதங்களாக இடம் பெற்றது.
- இது தொடர்பான எதுவித தகவல்களும் இந்திய மூலாதாரங்களில் குறிப்பிடப்படவில்லை. இலங்கை மூலாதாரங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நிகழ்வை உறுதிப்படுத்தும் தொல்பொருள் ஆதாரங்கள் இரண்டு நாடுகளிலும் கிடைத்துள்ளன. (சாஞ்சி, சோனாாரில் - தந்த தாதுக்கள், மிகிந்தலை, ரஜகல - கல்வெட்டுக்கள்)
- அசோக மன்னன் காலத்தில் பௌத்தத்தின் வளர்ச்சிக்கும் பிக்குகளின் நலனுக்கும் செய்து கொடுக்கப்பட்ட வசதிகளை கண்ணுற்ற ஏனைய சமயத்தவர்களும் தமது சுயலாபத்துக்காக பௌத்த சாசனத்துக்குள் நுழைந்ததோடு அதன் வீழ்ச்சியும் ஆரம்பமானது.
- இவ்வீழ்ச்சியிலிருந்து பௌத்தத்தை பாதுகாக்கவே மூன்றாம் பௌத்த மகாநாடு நடத்தப்பட்டு சங்க சோதனை செய்யப்பட்டதோடு, சாசனத்துக்கு முரணான 60 ஆயிரம் பிக்குகளும் சாசனத்தை விட்டு ஒதுக்கப்பட்டனர்.
- மூன்றாம் பௌத்த மகாநாட்டின் விளைவுகள்.
- மொக்கலிபுத்ததிஸ்ஸ தேரர் பிற நிக்காய பிரிவுகள் 500 ஐ தடை செய்து தேரவாதத்தை உறுதி செய்ததோடு, கதாபத்துபகரண எனும் தர்ம கிரந்தத்தையும் எழுதினார். இதனால் திரிபிடகம் பரிபூரணம் பெற்றது.
- அரச அனுசரணையோடு பௌத்த தர்மத்தை பிரச்சாரம் செய்யும் ஆதரவாளர்கள் 9 நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.
- மீண்டும் போய கருமங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டமை.

**( 08 புள்ளிகள்)**

## பகுதி C

**(6) மௌரிய பேரரசின் வீழ்ச்சிக்கு பின்னர் வடமேற்கு இந்தியாவில் வெளிநாட்டு ஆதிக்கம் தாபிக்கப்பட்டமை பற்றி விவரிக்குக.**

**(16 புள்ளிகள்)**

- மௌரிய பேரரசு வீழ்ச்சி அடைந்த பின் மூன்று நூற்றாண்டுகள் இந்தோ கிரேக்க (யவன) பார்த்தியர்கள் (பஹ்லவ) சக (சிதியர்கள்), குஷாணர் ஆகிய வெளிநாட்டு அரசா வம்சங்கள் அடிக்கடி தென்மேற்கு கணவாய்கள் ஊடாக வந்து தமது அதிகாரத்தை பரவலடைய செய்ததை காணலாம்.

**'இந்தோ - கிரேக்கர்கள்'**

- மௌரிய பேரரசின் இறுதி காலத்திலிருந்தே அடிக்கடி கிரேக்கர்கள் இந்தியாவுக்கு வந்ததோடு பிந்திய மௌரிய யுகத்தில் காணப்பட்ட நிலையற்ற அரசியல் சூழலில் அடிக்கடி ஆக்கிரமிப்புகளையும் மேற்கொண்டனர்.
- சிரியாவின் அந்தியோகஸ் மன்னன் இந்துகுஷ் மலையைக் கடந்து காபுல் பள்ளத்தாக்கிற்குள் நுழைந்து சுபகசேன மன்னனிடம் கப்பமாக யானைப் படைகளை பெற்றதோடு பஞ்சாப் மேற்கிந்திய பிரதேசங்கள் பலவற்றையும் கைப்பற்றினான்.
- டிமேட்ரியஸ் படையெடுத்து பாஞ்சாலம் சாகல பகுதிகளை கைப்பற்றினான்.
- மினெண்டரின் ஆக்கிரமிப்பின் மூலம் பல இந்திய பிரதேசங்கள் அவர் வசமாகின. சியால் கோட் - (சாகல) நகரை தலைநகராகக் கொண்டு கங்கை நதியிலிருந்து ஒக்ஸஸ் நதிக்கரை வரையும், இமாலயம் தொடக்கம் நர்மதா நதி வரையும் தனது ஆட்சியை விஸ்தரித்தான்.மினென்டர் மன்னன் பௌத்த தர்மத்துக்கு அனுசரணை வழங்கினான்.இவன் காலத்துக்குரிய அதிகமான நாணயங்கள் கிடைத்துள்ளன.(தக்ஷீலா , பெசாவர், ராவல்பிண்டி)
- மினெண்டர் மன்னனின் பின்னர் கிரேக்க அதிகாரம் வீழ்ச்சியடைந்தது. இவனுக்குப் பின் யுக்ரடைடஸ், ஹர்மயோஸ் ஆகியோர் ஆட்சி புரிந்தனர்.

**சாகர்கள் (சிதியர்கள்).**

- *மத்திய ஆசியாவில் இருந்து போலன் கணவாயுடாக வந்த நாடோடி கோத்திரங்களான சகர்கள் கி.மு. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் வடமேற்கு இந்தியாவில் அதிகாரத்தை வியாபித்துக்கொண்டனர்.
- தக்ஷீலாவிலிருந்து ஆட்சி நடத்திய முதல் சக மன்னன் மாவுஸ் (மோக) ஆவான்.
- இம்மன்னர்களுள் பலமிக்கவனாக விளங்கிய நகபானன் மூலம் மால்வா வரை ஆட்சி விரிவாக்கம் பெற்றது.
- சக ஆட்சியாளனான சாஸ்தான மன்னன் உஜ்ஜயினி வரை அதிகாரத்தை விஸ்தரித்தான்.
- இவ் வம்சத்தின் பிரபலமான மன்னனாக மகா சத்ரப ருத்ரதாமன் விளங்குகினான். ஜுனாகாட் பாறைக் குறிப்பின் படி இம்மன்னன் சாதவாகனர்களை இரு தடவைகள் தோல்வியடையச் செய்துள்ளதோடு, மால்வா, கதியவார், குஜராத்,மார்வார், வடகொங்கணம் மற்றும் சிந்து நதி வரை தனது அதிகாரத்தை பரவலடையச் செய்துள்ளான்.
- இவனுக்குப் பின் சக ஆட்சி பலவீனமடைந்தது.
- இவர்கள் தமது நிர்வாக பிரதேசங்களை சத்ரபர் எனும் அலகுகளாகப் பிரித்து நிறுவகித்துள்ளனர்.

**பார்த்தியர்(பஹ்லவர்)**

- சகர்களை தோற்கடித்து தக்ஷிலாவை தலைநகராகக் கொண்டு பார்த்தியர்களின் ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது.
- மித்ரடேட்ஸ் மன்னன் சிந்து வெளி வரை தனது ஆட்சியை விஸ்தரித்தான்.

- *தென்மேற்கு இந்தியாவில் பார்த்தியர்களின் அதிகாரத்தை பரப்பிய முதல் ஆட்சியாளன் கொண்டோபர்னீஸ் ஆவான்.
- இதன் பின் பலவீனமடைந்து பிளவுற்ற பார்த்திய அரசுகளை குஷானர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

**குஷாணர்.**

- குஷாண ஆட்சியாளன் கட்பீசஸ் பார்த்தியர்களை தோற்கடித்து தென்மேற்கு இந்தியாவை கைப்பற்றி கொண்டமை.
- வீமா கட்பீசஸ் தக்ஷிலாவையும் பஞ்சாபையும் கைப்பற்றியமை.
- குஷாண ஆட்சியின் தலைசிறந்த மன்னனான கனிஷ்க மன்னன் புருஷபுரத்தை தலைநகராக்கி வடமேற்கு இந்தியாவில் குஷாண பேரரசை நிறுவியமை.
- இம்மன்னன் காஷ்மீர் ராஜபுதனம், மால்வா உத்தரப்பிரதேசம், சிராவஸ்தி, கதியவார் பிரதேசம், கிழக்கிந்தியாவின் வங்காளம், ஒரிசா, பீகார், நேபாளம், வாரணாசி வரையும் ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியாவின் யார்காண்ட், பூட்டான் வரையும் மேற்கிந்தியாவிலும் தனது அதிகாரத்தை வியாபித்து இருந்தமை.
- பௌத்த சமயத்திற்கு அனுசரணை வழங்கினான்.( நான்காம் பௌத்த மகாநாடு மகாயானத்தின் எழுச்சி, காந்தார கலைகளின் வளர்ச்சி, பௌத்தத்தை மத்திய ஆசியாவில் பரவச் செய்தமை).
- கனிஷ்க மன்னனைத் தொடர்ந்து முறையே ஹூவிஷ்க வாசுதேவ ஆட்சி புரிந்தமை.
- வெளி இனக்குழுவாக இருந்தபோதும் இந்திய கலாச்சாரத்திற்கு பாரிய பங்களிப்பை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**(16 புள்ளிகள்)**

**(7) பின்வரும் தலைப்புகளில் குப்தர் கால கலாசார அபிவிருத்தி பற்றி பரிசீலிக்குக.**

**(i) மொழியும் இலக்கியமும்**

**(ii)சமயம்**

**(iii)கலையும் கட்டிடக்கலையும்**

**(i) மொழியும் இலக்கியமும்**

- இக்காலத்தில் சமஸ்கிருத மொழி பெரு வளர்ச்சி பெற்றது. அரச சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளிலும் கல்விச் செயற்பாடுகளிலும் சமஸ்கிருத மொழியே பயன்படுத்தப்பட்டமை.
- சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கு அரசு அனுசரணை வழங்கப்பட்டமை. பல இலக்கியங்கள் எழுதப்பட்டமை. இக்கால அறிஞர்களால் சமயம், தத்துவம், தர்மசாஸ்திரங்கள், நாடகங்கள், கலைகள், காவியங்கள், இலக்கணம், சோதிடம், தர்க்க சாஸ்திரம், கணிதம், விஞ்ஞானம்,புவியியல், வைத்தியத்துறை போன்ற பல துறைகளிலும் நூல்கள் எழுதப்பட்டமை.
- நாடக நூல்கள் - மாளவிகா, அக்னிமித்திரம், சாகுந்தலம், விக்ரமோர்வசி, முத்ரராக்சசம் ( காளிதாசன்), தேவி சந்திரகுப்தன் (விசாகா தத்தம்).

- காவியங்கள் - ரகு வம்சம், குமார சம்பவம், மேகதூதம், ரிது சம்ஹாரம்(காளிதாசன்), சிசு பாலவதம் (பாரவி).
- உரைநடை காவியங்கள் - வாச வதந்தம் (வசுபந்து)
- வைத்திய நூல் - அஷ்டாங்குருதம் (வுருஹத் வாக்ப)
- கணிதம் நட்சத்திர விஞ்ஞானம் - (ஆரியபட்டா) சூரிய சித்தாந்தம், புருஹத் சங்கீதம்.
- அமர கோஷம் (அமரசிங்கம்) இது சமஸ்கிருத மொழி அகராதி ஆகும்.
- தர்மசாஸ்திர கிரந்தம் - காத்யாயனம் - தர்மசூத்திரம்.
- அலகாபாத் மெய்க்கீர்த்தி - சமுத்திர குப்தனின் அரசவை கவிஞனான ஹரிசேன மூலம் எழுதப்பட்டது.
- பஞ்சதந்திரமும் மனோபதேசமும் இக்காலத்திலேயே எழுதப்பட்டது.ஹர்ச சரிதம்,காதம்பரி (பானபட்டர்).
- பாரவீ, காளிதாசன், அமரசிங்கம், பட்டர்,விசாகதத்தன், சூத்ரக, பாச போன்றோர் இக்கால எழுத்தாளர்களாவர்.
- இரண்டாம் சந்திரகுப்தனின் அரசவையில் நவரத்தின புலவர்கள் இருந்துள்ளார்கள். (தன்வந்தரி, செப்பனிக, அமரசிங்கம், சங்கு, வேதாளபட்டர், காளிதாசன், வரகாம்பீர, வரருசி).
- ஆட்சியாளர்கள் உயர் கல்வி நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்கியமை.

**(ii) சமயம்**

- பழைய பிராமண சமயம் புதிய வடிவத்தில் இந்து சமயமாக மறுமலர்ச்சி பெற்றது. (பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன்) போன்ற தெய்வ வழிபாடு முக்கியத்துவம் பெற்றமை. இவற்றோடு தொடர்புடைய இலக்கியங்கள் வளர்ச்சியுற்றமை. (புராண கிரந்தங்கள், விஷ்ணு முருதி, இராமாயணம், மகாபாரதம், மனுஷ்முருதி).

**(iii) கலையும் கட்டிடக்கலையும்**

- பௌத்த குகை விகாரைகள் அமைத்தல் - விகாரை, சைத்தியங்கள் (எல்லோரா, அவுரங்கபாத், பாக், உதயகிரி, தியோகார், விஷ்ணு தேவாலயம், பிதர்கின் தேவாலயம்) பௌத்தூபிகள் அமைத்தல் (சாரநாத் தாமெக் தூபி,சிந்துவில் மீராபூர் தூபி)
- சிற்பச் செதுக்கல் - எல்லோரா, பாக், சாரநாத் மற்றும் தியோகர் தேவாலயம்.
- சிற்பக் கலைகள் - பௌத்த இந்து சிலைகள் (சாரநாத் தர்மசக்கர முத்திரையுடனான அமர்ந்த சிலை, மதுரையில் நிற்கும் சிலை, ராமன், சீதை, அகத்தியர், விஷ்ணு சிவன், மிருக உருவங்கள் கிடைத்துள்ளமை. போதி சத்துவர் சிலைகள், தெய்வ உருவங்கள், (காசி புத்தகயா, சாரணாத்)
- சாந்தம், கருணை, மென்மை ஆகிய பண்புகளை வெளிப்படுத்தும் சிலைகள் வடிக்கப்பட்டமை.
- சித்திரக் கலை
- அஜந்தா குகை சித்திரங்களின் சிறப்பு.
- காளிதாசனின் நூல்களில் குறிப்பிடப்படும் எழில், மென்மை, காதல், சோகம் ஆகிய அத்தனை உணர்ச்சிகளையும் இந்த ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றமை.

- பத்ம பாணி போதி சத்துவர் சிலை, சுதத்தந்த சாதகம், ராகுல இளவரசன் புத்த பெருமானை சந்திப்பதை காட்டும் சித்திரங்கள்.

**(16 புள்ளிகள்)**

**(8) பின்வரும் தலைப்புகளின் கீழ் சோழ ஆதிக்கத்தின் பரம்பலை விளக்குக.**

**(i) கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் சோழர் ஆதிக்கத்தை தாபித்த முதல் ஆட்சியாளனின் பெயரைத் தருக.**

விஜயாலய சோழன் . **(01 புள்ளி)**

**(ii) சோழர் ஆதிக்கத்தின் கீழ் நிலவிய இரண்டு மண்டலங்களின் பெயர்களைத் தருக.**

சோழமண்டலம் பாண்டிய மண்டலம் மலைநாடு மண்டலம் கொங்கு மண்டலம் மும்முடி சோழ மண்டலம்.

**(02 புள்ளி)**

**(iii) முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் சாதனைகளை மதிப்பிடுக.**

**(09 புள்ளிகள்)**

**- முதலாம் ராஜராஜ சோழன்-**

- தென்னிந்தியாவில் சோழர் ஆதிக்கத்தை மீண்டும் தாபித்து புகழ்பெறச் செய்தவன் முதலாம் இராஜராஜ சோழன் ( 985 - 1016) ஆவான்.
- சேரர்களின் ராணுவ பலத்தை அழித்து சேர இராச்சியத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தமை.
- மதுரையை கைப்பற்றி பாண்டிய அரசனை சிறைபிடித்தமை.
- இலங்கை அனுராதபுர இராச்சியத்தை ஆக்கிரமித்தமை.
- மைசூரின் பெரும் பகுதிகளை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். (கங்கைபாடி, நுளம்ப பாடி ).
- மேற்குசாளுக்கிய இராச்சியத்தை ஆக்கிரமித்தமை. அதன் ஆட்சியாளன் சத்தியசிரேய மன்னனை விரட்டியடித்தமை.
- தொடர்ந்தும் கிழக்கு சாளுக்கிய ராச்சியத்தின் மீது படையெடுத்து, வெங்கியின் விமலாதித்திய மன்னனை தோல்வியடையச் செய்தமை. இதனால் விமலாதித்திய மன்னன் சோழர்களுக்கு அடிபணிய நேரிட்டது .
- வலிமையான கடற்கரையைக் கட்டி எழுப்பி மூலம் கடலாதிக்க பேரரசுக்கான அடித்தளத்தை இட்டமை.

**- முதலாம் இராஜேந்திரன்.**

- முதலாம் ராஜேந்திர மன்னன் மேற்கொண்ட படையெடுப்புகள், அவன் பெற்ற வெற்றிகள் தொடர்பான தகவல்களை அவனது திருவாலங்காடு செப்பேடு, திருமலை குன்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- வட இந்தியாவின் கிழக்கு பிரதேசத்தை இலக்காகக் கொண்டு வங்காளத்தின் கங்கை நதி வரை போர் தொடுத்தமை.

- *பாண்டிய கேரளா இராச்சியங்களை கைப்பற்றி தமது புதல்வர்களை ஆட்சியாளர்கள் ஆக்கியமை.
- இலங்கையின் வட பகுதியை ஆக்கிரமித்ததோடு ஐந்தாம் மகிந்தனையும் சிறைப்பிடித்துச் சென்றமை.
- பொலன்னறுவையை ஆட்சி தலைநகரமாகக் கொண்டு மும்முடி சோழ மண்டலம் எனும் பெயரில் சோழ பிராந்தியமாக்கியமை.
- தென் கிழக்கு ஆசியா மீது படையெடுத்து அந்தமான் நிக்கோபார் தீவுகளை கைப்பற்றியமை.
- ஸ்ரீ விஜயராச்சியத்தின் மீது படையெடுத்து சைலேந்திர மன்னனை தோற்கடித்து கடாரம் கோட்டையை கைப்பற்றியமை ( கடாரம் கொண்டான் எனும் சிறப்பு பெயர்).
- இந்தப் படையெடுப்பினூடே சுமாத்ரா, கடாரம், மலாய தீபகற்பத்தையும் கைப்பற்றி சோழர் ஆதிக்கத்தை தென்கிழக்கு ஆசியா வரை வியாபித்தமை.
- இதனால் இந்து சமுத்திரத்திலிருந்து தென்கிழக்கு ஆசியா வரையிலான வாணிபத்தையும் சோழர் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தமை.

**( 09 புள்ளிகள்)**

**(iv) சோழர் ஆதிக்கத்தின் அழிவு பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- இராஜேந்திர மன்னனின் இறுதி காலத்தில் மேற்கு சாளுக்கியர்களோடு யுத்தம் ஏற்பட்டமை.
- 1044 அளவில் ஆட்சிக்கு வந்த ராஜாதி ராஜ மன்னன் ஆரம்பத்தில் சாளுக்கியர்களுடன் வெற்றிகரமாக போரிட்டாலும் 1052 ல் நடந்த கொப்பம் யுத்தத்தில் மரணமடைய நேரிட்டமை. இவனது சகோதரனான இரண்டாம் ராஜேந்திரன் (பரகேசரி வர்மன்) இந்த யுத்தத்தை வெற்றி கொண்டதாக சோழ கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டாலும் இரு பிரிவினருக்கும் இடையே தொடர்ந்து யுத்தங்கள் இடம்பெற்றமை.
- பிற்பட்ட காலங்களில் வலிமையான சோழ மன்னர்கள் உருவாகாமையும் அதன் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.
- *பிற்கால சோழ மன்னர்களிடையே 1ஆம் குலோத்துங்க மன்னன் முக்கியமானவனாக குறிப்பிடப்பட்டாலும், இவனது காலத்திலேயே இலங்கை முதலாம் விஜயபாகு மன்னன் மூலம் சோழ ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை.
- குலோத்துங்க மன்னனின் பின்னர் வடக்கே ஹொய்சளர்களும், தெற்கே பாண்டியர்களும் எழுச்சி அடைந்தமை சோழர்களின் பலம் குன்றுவதற்கு காரணமானது. சோழராச்சியம் 1310 இல் மலிக் கபூரின் படையெடுப்போடு முடிவுக்கு வந்தது.
- இத்தோடு சோழர்களின் கடல் வலிமையும் அழிவுற்றது.

**(04 புள்ளிகள்)**

**(9) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.**

**(08 x 2=16 புள்ளிகள்)**

**(i) குஷாணர் காலத்தில் பௌத்தம்.**

- வெளி இனத்தவர்களான குஷாணர்கள் பௌத்த சமயத்திற்கு ஆதரவு வழங்கியமை.
- கனிஷ்க, வசிஸ்க மற்றும் பூவிஷ்க ஆகிய ஆட்சியாளர்கள் பௌத்த சமயத்திற்கு அனுசரணை வழங்கியமை.
- நான்காம் பௌத்த மகாநாடு வசுமித்திரதேரர் தலைமையில் புருஷபுரத்தில் குண்டல வன விகாரையில் நடத்தப்பட்டமை. இந்நிகழ்வில் அஸ்வகோச, பார்சவ, வசுபந்து, சூரியபந்து, ஜீனபந்து போன்ற முக்கிய தேரர்கள் 500 பேர் கலந்து கொண்டமை.
- இம்மகாநாட்டில் 18 நிக்காயப் பிரிவுகளாக பிளவுற்றிருந்த மகாயானம் பற்றி கலந்துரையாடப்பட்டமை.
- மகாநாட்டின் பின்னர் (மகாவிபாசா, வினைய விபாசா, சூத்திரவிபாசா, அபிதர்மவிபாசா) போன்ற பெயர்களில் சமஸ்கிருத மொழியில் திரிப்பிடக அட்டுவாக்கள் எழுதப்பட்டு அவை செப்பு தகடுகளில் எழுதி பாதுகாக்கப்பட்டமை.
- இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு பௌத்தம் பரப்பப்பட்டமை - மத்திய ஆசியா, சீனா, கொரியா, ஜப்பான்) இதன் விளைவாக மத்திய ஆசியாவில் யார்கண்ட், போட்டான், நீயர் போன்ற இடங்களில் பௌத்த மத்திய நிலையங்கள் உருவானமை.
- பூவிஷ்கபுர ஆராமையில் 500 பிக்குகள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலக்கியங்களின் வளர்ச்சி- அஸ்வகோஷ, நாகர்ஜுன, வசுமித்ர, வசபந்து, ஆரியதேவ, சங்கமித்ர, பார்சவ, நாகார்ஜுன போன்ற அறிஞர்கள் பௌத்த கிரந்தங்களை இயற்றியமை.
- தசபூமி,விபாசா, சாஸ்திரம்,சுபுத்லேகா,விங்சதிபங்ஞ,பாரமிதா,டீகா கிரந்தம், புத்த சரிதம்,சூத்திரலங்கார,சாரிபுத்ரகரணய,சௌந்தரானந்த காவியம் போன்ற பல கிரந்தங்கள் உருவானமை.
- மகாயான கிரந்தங்கள் சீன மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டமை.
- காந்தாரம், மதுரை கலை சம்பிரதாயங்கள் தோன்றியமை.
- கலைகள் மேலைத்தேய செல்வாக்குக்கு உட்பட்டமை.
- கனிஷ்க,வசிஸ்க,பூவிஷ்க போன்ற மன்னர்களின் காலங்களில் பௌத்த சமய தளங்கள் அபிவிருத்தி அடைந்தமை.
- பௌத்த கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை (விகாராராம தூபி, பேசாவர் தாது மந்திரம்).
- புத்தர் சிலைகளின் நிர்மாணம் ஆரம்பமானமை.
- போதிசத்துவர் சிலைகள் செதுக்கப்பட்ட மை.
- இந்து-கிரேக்க கலைகளின் வளர்ச்சி.
- சிற்பம் - செதுக்கல் கலைகளின் வளர்ச்சி.

**( 08 புள்ளிகள்)**

**(ii) சாதவாகனரின் கீழ் தக்கணம்.**

- கி.மு.3 ஆம் நூற்றாண்டளவில் சுங்கம்,கான்வா ஆகிய அரச வம்சங்களை ஆக்கிரமித்து சாதவாகன வம்சம் எழுச்சி அடைந்தமை.

- சாதவாகனர் தொடர்பாக புராண கிரந்தங்களிலும் அசோக கல்வெட்டுக்கள், காரவேலனின் ஹதிகும்பா கல்வெட்டு, கார்லே, நாசிக், நானாகாட் போன்ற இடங்களில் கிடைத்துள்ள சாத வாகன குறிப்புகள், நாணயங்கள், பிளினியின் அறிக்கை, ருத்ர தாமனின் ஜுனாக்காட் மற்றும் கண்ஹார் கல்வெட்டுக்களின் மூலம் தகவல்கள் கிடைத்துள்ளமை.

- சாதவாகன முதல் மன்னன் சிமுகன் ஆவான்.
- இவன் சில காலம் கான்வா மன்னனின் ஆதிக்கத்தின் கீழிருந்து கான்வா வம்சத்தின் இறுதி மன்னனான சுசர்மனை கொலை செய்து அரசுரிமை பெற்றமை.

- சிமுகனின் பின் அவனது சகோதரன் (கிருஷ்ணன்) ஆட்சியேற்று மேற்கே நாசிக் வரையும் அதிகாரத்தை விஸ்தரித்தமை.

- பின்னர் சிமுகவின் மகன் சதகர்னீ தனது அதிகாரத்தை தக்கணத்தில் பரவலடைய செய்து, அஸ்வமேத யாகங்கள் இரண்டை நிகழ்த்தியமை. நானாகாட் கல்வெட்டில் சதகர்னி மன்னன் (வீர, சூர, அப்ரிதிஹத மற்றும் தக்ஷினாபட்டபதி) என்ற பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- கௌதமி புத்ர சதகர்னீ காலத்திலேயே சாதவாகன ஆட்சி தக்கணத்தில் பலம் பெற்றது.

- இம்மன்னன் சகசத்திரப்ப ஆட்சியாளனான நகபான மன்னனை தோல்வியடையச் செய்து அவன் கீழிருந்த அப்பராந்த சௌராஷ்டிரம், கிழக்கு மேற்கு அவந்தி, மால்வா, கதர், அநூப ஆகிய பிரதேசங்களை கைப்பற்றிக் கொண்டமை. யவனர்கள், பஹ்லவர்களை தோற்கடித்தமை. வடக்கே மால்வா, கத்யவார் வரையிலும், கிழக்கே பேரார் வரையும், மேற்கே கொங்கணம் வரையும், தெற்கே கிருஷ்ணா நதி தொடக்கம் கோதாவரி வரையும் ஆட்சியை பரவல் அடையச் செய்தான். இவன் இராஜராஜ மகாராஜன், வரவாரன விக்ரமாச்சார போன்ற பட்டப் பெயர்களை சூடிக்கொண்டமை.

- கௌதமி புத்ர சதகர்னிக்கு பின் வாசிஸ்டபுத்திர பூலமாயி ஆட்சிக்கு வந்தான். இவனது ஆட்சியின் கீழேயே பெலரி பிரதேசம் சாதவாகனர் வசமாயிற்று. அத்தோடு தக்கணத்தின் அதிகாரமும் பரவலடைந்தது. இதனால் இந்த இராச்சியம் 'ஆந்திர பட்ட சாதவாகினி அரசு' என அழைக்கப்படலாயிற்று. இவன் கால நாணயங்கள் கோதாவரி, உத்தர பிரதேசங்களிலும் கொரமண்டல் கரையிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நாசிக், கார்லே, அமராவதி பிரதேசங்களிலிருந்து கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- பூலமாயி மன்னனைத் தொடர்ந்து சிவ சதகர்னியும் பின் யக்ஞ ஸ்ரீ சதகர்னியும் ஆட்சி செலுத்தினர். இவனே சாதவாகன வம்சத்தின் இறுதி மன்னன் ஆவான். இவனாலேயே கிருஷ்ணா கோதாவரி பிரதேசம், மகத பிரதேசம், வடகொங்கனம், பரோடா,கத்தியவார் போன்ற பகுதிகளிலும் அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டு சாதவாகன ஆட்சியும் பாதுகாக்கப்பட்டு வந்தது. இவனது ஆட்சி காலத்துக்குரிய நாணயங்கள் கிருஷ்ணா, கோதவரி பகுதிகளிலும் பேரார், வட கொங்கணம்,பரோடா, கத்தியவார், சுப்பாரக்க ஆகிய பிரதேசங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- அளவில் சாதவாகனப் பேரரசு மிகப் பரந்ததாக காணப்பட்டாலும் அதன் அரசியல் முறைமை மிக இலகுவானதாகவே அமைந்திருந்தது. அரசனே தலைமை நிர்வாகியாவான். மத்திய ஆட்சி ஒரு திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டது. அரச நிர்வாகம் அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. ஒரு அலகு (ஆகாரம்) ஒரு அமைச்சரின் கீழிருந்தது. மகா சேனாதிபதி, களஞ்சிய பொறுப்பதிகாரி, திட்டமிடல் அதிகாரி, பிரதான அமைச்சர்கள், அறிக்கைப்படுத்துவோர் போன்ற அதிகாரிகள் அரசுக்கு உதவி புரிந்தனர். பிரதேச நிர்வாகம் அரசின் ஆணைப்படியே நிர்வகிக்கப்பட்டது. கிராமங்கள் கமிக்க மூலம் நிர்வகிக்கப்பட்டது.

- பெண்களுக்கு சிறப்பிடம் வழங்கப்பட்டிருந்தமை. தமது பெயர்களோடு தாயின் பெயர்களையே இணைத்து அடையாளப்படுத்தப்பட்டமை. ஒரு பெண் தனது கணவனுக்கு நிகராக செயலாற்றியமை பற்றி சிற்பங்கள் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளமை.

- அரச அனுசரணையின் கீழேயே பொருளாதாரம், விவசாயம், வர்த்தகம் கைத்தொழில் ஆகிய துறைகள் செயற்பட்டுள்ளமை. வர்த்தகம், உற்பத்தி நடவடிக்கைகள் என்பன வர்த்தக தரங்கள் (அமைப்பு) முறை மூலமே செயல்படுத்தப்பட்டன. தானிய வியாபாரிகள், தச்சர்கள், நெசவாளர்கள், ஆபரண உற்பத்தியாளர்கள் என்போர் காணப்பட்டனர். ஒவ்வொரு தரத்திற்கும் செயலாளர் (செட்டிமார்) காணப்பட்டனர். அதற்கான சபை மண்டபம் (நிகம சபை) இருந்துள்ளது. வங்கி முறை காணப்பட்டுள்ளன.

- உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியுற்று காணப்பட்டமை. தேசிய வர்த்தக நகரங்களாக( பைத்தான், புன்னார், கரகாட்டக், நாசிக், வைஜயந்தி) காணப்பட்டன. இயங்கும் துறைமுகங்கள் காணப்பட்டமை.(சுவர்ணகிரேசம்,பெரிகசாவர்,சோபாரா) ஏற்றுமதி பொருட்களிடையே மாணிக்கங்கள், மெல்லிய ஆடைகள், முத்திரையிடப்பட்ட பானங்கள், மென்மையான பட்டு, வாசனைப் பொருட்கள், பீங்கான் ஆகியன முக்கியத்துவம் பெற்றிருந்தன.

- சாதவாகனர் ஆட்சியில் தக்கணம் கலாசார பண்பாட்டு ரீதியான பெரு வளர்ச்சியை கண்டமை குறிப்பிடத்தக்கது. பௌத்தம், பிராமண சமயத்தின் வளர்ச்சி, வாஸ்து விஞ்ஞானம், கலைகளின் வளர்ச்சி, இலக்கியங்களின் முன்னேற்றம், தேசிய கலைகள் இந்தியாவைத் தாண்டி வியாபிக்க செய்தமை, சமய சகிப்புத்தன்மை பேணியமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

- சாதவாகனர்களின் கீழ் பௌத்தம் - அமராவதி தூபியை பெருப்பித்தமை/அல்லூர்,கும்மதித்தூர்,கண்டசாலா,குதிவாலி,கோலி போன்ற இடங்களில் தூபிகள் நிர்மாணிக்கப்பட்டமை.நாசிக்,கார்லே,கான்வார் போன்ற இடங்களில் குகை விகாரைகளை கட்டியமை/ இன்னும் பல விகாரைகள், சைத்தியங்கள், குகைகள் அமைத்து அதனுள் சிற்பம் செதுக்கல் கலைகளை வளர்ச்சியடைய செய்தமை.இக்கால கட்டிடக்கலை வளர்ச்சி தொடர்பாக கிருஷ்ணா கோதாவரி நதிக்கரைகளில் கிடைககப்பெற்ற தொல்பொருள் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றமை.

- பிராமண சமயத்தின் வளர்ச்சிக்கான சேவைகள் - சில மன்னர்கள் பிராமண சமயத்துக்கு அனுசரணை வழங்கியமை. வேள்விகள் நடத்தியமை, சிவனைப் புகழும் பாடல்கள் பாடச் செய்தமை, இராமன், கேசவன், அர்ஜுனன் போன்ற வீர காவியங்களில் வரும் வீரர்களை பின்பற்றியமை. விஷ்ணு, சிவன் கிருஷ்ணன்,கணேசன் மற்றும் பசுபதி தெய்வக் கொள்கைகள் வளர்ச்சி பெற்றமை.

**( 08 புள்ளிகள்)**

**(iii) சமுத்திர குப்தனின் இராணுவ முற்றுகைகள்.**

- சமுத்திர குப்தனின் ஐந்து இராணுவ ஆக்கிரமிப்புகள் தொடர்பான தகவல்கள் அலகபாத் மெய்க்கீர்த்தி சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆரியவர்த்தனத்தை வெற்றி கொண்டமை. ஒன்பது இராச்சியங்களை ஆக்கிரமித்து குப்த ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தமை. இப்படையெடுப்பில் ரவிதேவ, மிதிலை, நாகதத்த, சந்திரவர்மன், நாகசேன, நந்தின, அச்சயுத்தன், கணபதி நாகன், பாலவர்மன், ஆகிய மன்னர்களை தோல்வியடைய செய்தமை.
- 18 இராச்சியங்களை வெற்றி கொண்டமை. மத்திய இந்தியாவின் விந்திய மலைத்தொடரை அண்டிய இராச்சியங்களின் அரசர்களை தோல்வியடையச் செய்து அடிமையாக்கியமை.
- தட்சிணபட்ட இராச்சியத்தை வெற்றி கொண்டமை. அதன் அரசர்களை சமுத்திரகுப்தனின் அதிகாரத்தை ஏற்கச் செய்து அவர்களது அரசுகளை மீள கையளித்தமை. (கோசலை, மகாகாந்தாரம், பிஸ்டபுரம், கோட்டூர், இருண்ட பள்ளம், காஞ்சிபுரம், அவமுக்தா, வெங்கி,பல்லாக்கு,தேவராஷ்டிரம்,குஷ்டலபுரம்).
- பிராந்திய அரசுகளை அடிபணியச் செய்தமை. சமத்த(வங்காளம்), தவாக்க (அசாம் பிரதேசம்), நேபாளம், காமரூப (மேற்கு அசாம்), கத்திரிபுரம் (ஜலந்தார்).
- கண இராச்சியங்கள் (கோத்திரங்கள்) ஒன்பதையும் அடிமைப்படுத்தியமை. மாலாவி, அர்ஜீநாயக்க, யௌதேய, ஆசீரம், பிரார்ஜூன, கனகாபிக, காக்க, கரபரக்க, பிராந்திய ஆட்சியாளர்களும், கண இராச்சியத்தின் ஆட்சியாளர்களும் கப்பம் செலுத்தியமை. குப்த இராச்சியத்தின் கட்டளைகளை பின்பற்றியமை. பரிசுப் பொருட்கள், கப்பம் செலுத்தும் பொருட்களுடனும் மன்னனை சந்தித்து தமது அடிபணிதலை தெரிவித்ததன் மூலம் சமுத்திரகுப்தனின் ஆதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டமை.

**( 08 புள்ளிகள்)**

**(iv) முக்கோணப் போராட்டம்.**

- ஹர்சவர்த்தன மன்னனின் மரணத்தின் பின்னர் வட இந்திய பகுதியின் ஆதிக்கத்தை பெறுவதில் மூன்று அரச வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட போராட்டமே முக்கோண போராட்டம் எனப்படுகிறது.
- மேற்படி மூன்று அரசுகளாவன மேற்கிந்தியாவின் ராஜபுதனத்தின் கூர்ஜர் பிரதிகஹார் அரசு, வங்காளத்தின் பால அரசு, மேற்குத் தக்கணத்தின் மகாராஷ்டிர இராஷ்டிரகூட இராச்சியம் ஆகியனவாகும்.
- ஹர்ஷவர்த்தன ஆட்சி காலத்தில் வட இந்தியாவின் மத்திய நிலையமாக கானோஜ் மாறியமையால், கானோஜின் ஆதிபத்தியத்தை கைப்பற்றுவதற்காகவே மேற்படி இராச்சியங்கள் மோதிக்கொண்டன. கானோஜை வெற்றி கொள்வதானது வட இந்திய அரசியல் ஆதிபத்தியத்தின் அடையாளமாக அமைந்திருந்தமையாலாகும்.
- கூர்ஜர பிரதிஹாரின் மன்னன் வத்சராஜன் மூலம் பால வம்சத்தின் தர்மபாலனை தோற்கடித்து கிழக்கே அதிகாரத்தை விரிவடையச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டதோடு இராஷ்திரகூட திரேவ் மன்னன் அவனை தோல்வியடையச் செய்து ராஜபுத்தான காந்தாரப்பக்கம் விரட்டியடித்தான்.
- இதனால் தர்மபால மன்னனுக்கு கூர்ஜர பிரதிஹார் மன்னனின் தாக்குதலை தவிர்த்து தனது அதிகாரத்தை மேற்காக வியாபிக்க முடிந்தமை.



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

- ஆனாலும் இராஸ்திர கூட மன்னன் திரேவ் வங்காளத்தை ஆக்கிரமித்து தர்மபாலனை தோற்கடித்தான். எனினும் திரேவ் மன்னன் திடீரென திரும்பிச் செல்ல வேண்டிய ஏற்பட்டதால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய தர்மபாலன் கானோஜை கைப்பற்றி பிரதிஹாரின் கீழிருந்த இந்திராயுதத்தை விடுவித்து தனக்கு சார்பான சக்கராயுதத்தை அதன் மன்னனாக நியமித்தமை.

- கூர்ஜரப் பிரதிஹாரின் ஆட்சியாளன் இரண்டாம் நாகன் (வத்சராஜனின் மகன்) பிரத்திஹாரின் ஆட்சியதிகாரத்தை மீண்டும் நிலை நிறுத்தும் போராட்டத்தில் தர்மபாலனை தோல்வியுறச் செய்தமை.

- ஆனால் இராஸ்திர கூட மன்னன் மூன்றாம் கோவிந்தன் வடபிரதேசத்தை ஆக்கிரமித்து நாகவை தோற்கடித்தான். எனினும் வெற்றியை நிலை நிறுத்த முன்பே கோவிந்த மன்னனுக்கும் திரும்பிச் செல்ல நேர்ந்தமையானது தர்மபாலனுக்கு சாதகமாக அமைந்தது.

- தர்மபாலனின் புதல்வன் தேவபால மன்னனும் வட இந்திய அதிகாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.

- *எனினும் தேவபாலனின் பின்னர் பாலவம்சத்திலிருந்து பலவீனமான மன்னர்களே ஆட்சி செலுத்தியமையால் போஜ மன்னனின் கீழ் மீண்டும் கூர்ஜர பிரதிஹார் எழுச்சி பெற்றமை.

- கூர்ஜர பிரதிஹார் மன்னனான போஜவும் யுத்தங்களில் ஈடுபட்டு வட இந்திய பேரரசின் ஆட்சியை கைப்பற்ற செயலாற்றியமை.

- இறுதியாக இந்த இராச்சியங்கள் மூன்றும் தளர்வடைந்ததோடு வேறு குழுக்கள் அதிகாரத்தை வெற்றி கொண்டன.

**( 08 புள்ளிகள்)**

(31) www.PastPapers.Wiki (31)



2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු850.00
or 3 X රු283.33 with KOKO



2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු1,200.00
or 3 X රු400.00 with KOKO



2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු850.00
or 3 X රු283.33 with KOKO



2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු850.00
or 3 X රු283.33 with KOKO



2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු1,000.00
or 3 X රු333.33 with KOKO



2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු500.00
or 3 X රු166.67 with KOKO



2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු800.00
or 3 X රු266.67 with KOKO



2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු900.00
or 3 X රු300.00 with KOKO



2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු850.00
or 3 X රු283.33 with KOKO



2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු800.00
or 3 X රු266.67 with KOKO



2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු1,100.00
or 3 X රු366.67 with KOKO



2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු600.00
or 3 X රු200.00 with KOKO



2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු850.00
or 3 X රු283.33 with KOKO



2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු1,000.00
or 3 X රු333.33 with KOKO



2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු900.00
or 3 X රු300.00 with KOKO



2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු1,000.00
or 3 X රු333.33 with KOKO



2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු750.00
or 3 X රු250.00 with KOKO



2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු1,050.00
or 3 X රු350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA